

நெல்லை மாவட்டம் பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர் தேக்கத்தி லிருந்து பிசான பருவ சாகுபடிக்காக பாபநாசம் நீர் தேக்கத்திலிருந்து சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை மக்களவை உறுப்பினர் ராபர்ட் புரூஸ், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார். நிகழ்வில் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின்,மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெகதீஸ், அம்பை நகர்மன்ற தலைவர் பிரபாகரன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாலமோன் டேவிட், ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன் உள்பட அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ரூ.9லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நுழைவுவாயிலையும், 24 கிராம ஊராட்சிகளுக்கு சுமார் ரூ.62லட்சம் மதிப்பிலான பேட்டரி வாகனங்களையும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி, திட்ட இயக்குநர் திலகவதி, ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருமூர்த்தி, துணைத்தலைவர் ராஜேஸ்வரி, கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், வடக்கு ஒன்றிய செயலாளர் மணி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

திருச்செந்தூர் - சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் கட்டப்பட்டுள்ள

# பக்தர்கள் தங்கும் விடுதி அறைகளுக்கான முன்பதிவு!

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் தொடக்கம்!

திருச்செந்தூர், அக்.31–

திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக் கோயில் சார்பில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் விடுதி அறைகளுக்கான முன் பதிவு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தொடங்கியது.

அதன் விபரம் வருமாறு:–

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங் கும் விடுதியானது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நிர்வகிக்கப்பட்டு நேற்று முன்தினம் (29.10.2024) முதல் பக்தர்கள் பயன்பாட் டிற்கு கொண்டு வரப்பட்டுள் ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூ.48.36 கோடி மதிப்பீட்டில் கட் டப்பட்ட புதிய பக்தர்கள் தங்கும் விடுதியினை திறந்து வைத்தார் கள்.

இந்த புதிய பக்தர்கள் தங் கும் விடுதியானது இரண்டு தளங்களுடன் 99,925 சதுர அடி பரப்பளவில் அமைக்கப் பட்டுள்ளது. இதில் குளிர் சாதன வசதிகளுடன் 100 இரு வர் தங்கும் அறைகள் (Double Bed Rooms), 9 கட டில்கள் கொண்ட 16 அறைகள் மற்றும் 7 கட்டில்கள் கொண்ட 12 அறைகள் என 28 கூடுதல் படுக்கை அறைகள் (Dormitory Blocks), ஹால் மற்றும் இரண்டு படுக்கை அறைகளுடன் கூடிய 20 பக்தர் கள் தங்கும் குடில்கள் (Family Cottages), சமையல் அறை யுடன் கூடிய உணவகம், ஓட்டு நர்கள் ஓய்வு அறை, வாகனங் கள் நிறுத்துமிடம், மின்தூக்கி என அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விடுதியில் ஹால் மற் றும் இரண்டு படுக்கை அறை களுடன் கூடிய 20 பக்தர்கள் தங் கும் குடில்கள் (Family Cottages) திருக்கோயில் நிர் வாகத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஒரு குடிலுக்கு நாளொன்றுக்கு வாடகையாக ரூ.2,000 நிர்ணயம் செய்யப் பட்டு கடந்த 23.10.2024 முதல் பக்தர்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது.

குளிர்சாதன வசதிகளுடன் 100 இருவர் தங்கும் அறைகள் (Double Bed Rooms), 9 கட டில்கள் கொண்ட 16 அறைகள் மற்றும் 7 கட்டில்கள் கொண்ட 12 அறைகள் என 28 கூடுதல் படுக்கை அறைகள் (Dormitory Blocks), சமை யல் அறையுடன் கூடிய உணவ கம், ஓட்டுநர்கள் ஓய்வு அறை போன்றவை தமிழ்நாடு சுற் றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இந்த அறைகளுக்கான முன்பதிவு நேற்று முன்தினம் (29.10.2024) முதல் தொடங்கியது.

இராணிப்பேட்டை மாவட்டக் கழக

# தொகுதிப் பார்வையாளர்கள் - பூத் கமிட்டி சரிபார்த்தல் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!



இராணிப்பேட்டை, அக். 31-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க தொகுதி பார்வையாளர்கள் BLA2 மற்றும் பூத் கமிட்டி சரி பார்த்தல் கூட்டம் நடை பெறுகிறது என அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி தெரிவித்துள்ளார்.

அது வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொகுதிப் பார் வையாளர்கள் ஆலோச னைக் கூட்டத்தில் அறிவு றித்தியபடி இராணிப் பேட்டை மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன் றத் தொகுதிகளுக்கு நிய மிக்கப்பட்டுள்ள தொகுதி பார்வையாளர்கள் கீழ்க்கா ணும் நாட்களில் அந்தந்த சட்டமன்றத் தொகுதிக ளில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர்களில் BLA2 மற்றும் பூத் கமிட்டி சரிபார்க்கும் பணிகள் எனது (அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி) தலைமையில் நடை பெறும் என்பதை தெரிவித் துக் கொள்கிறேன்.

**சட்டமன்ற தொகுதி , நாள்**

அரக்கோணம் சட்ட மன்ற தொகுதி 04.11.2024, சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி 05.11.2024, இராணி பேட்டை சட்டமன்றத் தொகுதி 07.11.2024, ஆற் காடு சட்டமன்றத் தொகுதி 08.11.2024

இவ்வாறு அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்துள் ளார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

# பர்கூரில் புதிய உள்விளையாட்டு அரங்கம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.மதியழகன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

கிருஷ்ணகிரி, அக். 31-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செய லகத்திலிருந்து, காணொ ளிக் காட்சி வாயிலாக, ரூ.8 கோடியே 65 இலட்சம் மதிப்பில் கட்டப்பட் டுள்ள உள் விளையாட்டு அரங்கத்தை திறந்து வைத் ததையடுத்து, பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் .கே.எம்.சரயு அவர்கள் குத்துவிளக்கு ஏற்றினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செய லகத்திலிருந்து, காணொ ளிக் காட்சி வாயிலாக, உயர்கல்வித்துறை சார் பாக, பர்கூர் அரசு பொறி யியல் கல்லூரியில் ரூ.8 கோடியே 65 இலட்சம் மதிப்பில் புதியதாக கட் டப்பட்டுள்ள உள் விளை யாட்டு அரங்கத்தை திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் ரூ.8 கோடியே 65 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட் டுள்ள உள் விளையாட்டு அரங்கத்தை மாவட்ட ஆட்சித்தலைவர். சரயு ., பர்கூர் சட்டமன்ற உறுப்பி னர் தே.மதியழகன் முன்னி லையில் உள் விளையாட்டு அரங்கத்தை பார்வை யிட்டார்.

மாவட்ட ஆட்சித்தலை வர் சரயு தெரிவித்ததா வது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கி ணங்க, பள்ளி மற்றும் கல் லூரி மாணவர்கள் கல்வி மட்டுமல்லாமல் விளை யாட்டு துறையிலும் சிறந்து விளங்க, மாவட்டம் மற் றும் மாநில அளவில் செஸ் ஒலிம்பியாட் போட்டி, மண்டல அளவில் ஜீடோ போட்டிகள், வாள் சண்டை, பேட்மிட்டன், மாவட்டம் மற்றும் மாநில அளவில் முதலமைச்சர் கோப்பை உள்ளிட்ட பல் வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப் பட்டு வருகிறது.

மேலும், விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்க ஏதுவாக, 29.10.2024 அன்று தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொளிக் காட்சிவாயி லாக, பர்கூர் அரசு பொறி யியல் கல்லூரியில் ரூ.8 கோடியே 65 இலட்சம் மதிப்பில் புதியதாக கட் டப்பட்டுள்ள உள் விளை யாட்டு அரங்கத்தை திறந்து வைத்துள்ளார்கள். இந்த உள்விளையாட்டு அரங்கத் தில், தரைத்தளம் 1846.76 சதுர மீட்டர் பரப்பளவி லும், முதல் தளம் 548.62 சதுர மீட்டர் என மொத் தம் 2395.38 சதுர மீட்டர் (25,774.28 சதுர அடி) பரப் பளவில் அமைக்கப்பட் டுள்ளது. தரைத்தளத்தில் கூடைப்பந்து மைதானம் 1 எண், நெட்டிப் பந்து மைதானம் 4 எண்கள், சது ரங்க விளையாட்டு அறை 1 எண், மேசைப்பந்தாட் டம் அறை 1 எண், பயிற்சி அளிப்பவர் அறை 4 எண் கள், ஆண்களுக்கான கழிப் பறை 1 எண், பெண்களுக் கான கழிப்பறை 1 எண், உடற்பயிற்சி அறை 1 எண், சேமிப்பு அறை 1 எண், தங் குமிடம் அறை 2 எண்கள் ஆகியவை அமைக்கப்பட் டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்க டேசன் , மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்த சாமி,சாவித்திரி கடலரசு மூர்த்தி , பொருளாளர் கதி ரவன், பொதுக்குழு உறுப் பினர்கள் பாலன், நாகரா சன், அஸ்லாம், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்தி ரன், அறிஞர் , ரஜினி செல் வம் , பேரூர் கழக செயலா ளர் வெங்கடப்பன் , மற்றும் அன்பரசன் பேரூ ராட்சி தலைவர்கள் சந் தோஷ்குமார் தம்பிதுரை , அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கல்லூரி மாணவ, மாணவி யர்கள் கலந்து கொண்ட னர்.

அமைச்சர் ஐ.பெரியசாமியிடம்

# திண்டுக்கல் பிரஸ் கிளப் நிர்வாகிகள் வாழ்த்துப் பெற்றனர்!

## எம்.சக்திவேல் தலைமையில்!

திண்டுக்கல் , அக். 31 -

திண்டுக்கல் பிரஸ் கிளப் தலைவர் எம்.சக்திவேல் தலைமையில் நிர்வாகிகள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரிய சா மிக்கு சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றனர்.

திண்டுக்கல் மாவட்ட பிரஸ்கிளப் தலைவர் நக்கீ ரன் சக்திவேல் தலைமை யில் செயலாளர் வேந்தர் டிவி எம். வீரமணிகண்டன், பொருளாளர் நெற்றிக்கண் பிரதீப் குமார், மூத்த நிரு பர் சன் டிவி அய்யப்பன், துணைச்செயலாளர் ஜி.கரு ணாகரன், துணைத் தலை வர் சு.உதயசங்கர், ஆகி யோர் திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. அலுவல கத்தில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரும், திமுக மாநில துணைப் பொது ச் செயலாளருமா ன ஐ.பெரி யசாமிக்கு சால்வை அணி வித்து தீபாவளி வாழ்த்து கூறி அவரிடமிருந்து வாழ்த்துப் பெற்றனர். அப்போது நிருபர்கள் மத் தியில் பேசிய ஊரக வளர்ச் சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி பத்திரிக்கை துறையிலிருந்து பலர் அரசி யலுக்கு வந்துள்ளனர். குறிப்பாக முத்தமிழ் அறி ஞர் கலைஞர் அவாகள் முதல்வராக இருந்தபோது திண்டுக்கல் பிரஸ் கிளப் புக்கு கட்டிட வசதி வேண் டுமென கோரிக்கைவிடுத்த வுடன் உடனடியாக நிறைவேற்றி கொடுத்ததை நினைவு கூர்ந்தார்.

அதன் பின்னர் அனைவ ரும் மகிழ்ச்சியுடன் பாது காப்பாக தீபாவளி கொண் டாடுங்கள் என வாழ்த்தினார். நிகழ்ச்சியின் போது மூத்த பத்திரிக்கை யாளரும் பசுமை விகடன் முன்னாள் ஆசிரியருமான குமரேசன், மாலைமுரசு நிருபர் குமார், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. துணைச்செயலாளர் ஆ.நாகராஜன், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்ட பாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் ஒன்றிய செய லாளர்கள் நெடுஞ்செழி யன், வெள்ளிமைல, பொதுக்குழு உறுப்பினர் அக்பர், மாவட்ட இலக் கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், விவசாய அணி அமைப்பாளர் முரு கானந்தம், தி.மு.க. நகர பொருளாளர் சரவணன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கும் மம்பட்டி விவேகானந்தன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# பல்லாவரம் தொகுதியில் 1500 பேருக்கு நல உதவிகள்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. வழங்கினார்!

பல்லாவரம், அக். 31 -

பல்லாவரம் சட்டமன் றத் தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1, 2 ,3 ,கசு பல் லாவரம் பம்மல் அனகாபுத் தூர் திருநீர்மலை குரோம் பேட் ஆகிய பகுதிகளில் உள்ள மாமன்ற உறுப்பி னர்கள், பகுதி கழகச் செய லாளர்கள், பகுதி கழக நிர் வாகிகள், வட்டக் கழக செயலாளர் வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், புனித தோமையார் மலை ஒன்றி யத்துக்குட்பட்ட பொழிச் சலூர் ஊராட்சி திரிசூலம் ஊராட்சி சென்னை மாநக ராட்சி 159 ஆவது வார்டு மீனம்பாக்கம் ஆகிய பகுதி களைச் சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர்கள் துணைத் தலைவர்கள் ஊராட்சி மன்ற செயலா ளர் ஊராட்சி மன்ற நிர்வா கிகள் உள்ளிட்ட 1500 கழக நிர்வாகிகளுக்கு பல் லாவரம் சட்டமன்ற உறுப் பினர் இ.கருணாநிதி கழக விழாக்கள் பண்டிகை காலத்தை ஒட்டி நல திட்ட பரிசுகளாக பட்டாசு ஸ்வீட் பாக்ஸ் மற்றும் அனைவருக்கும் பண முடிப்பு ரொக்கமாகவும் ஒவ்வொரு பகுதியாகச் சென்று அந்த பகுதிகளை சேர்ந்த நிர்வாகிகளுக்கு அந்த பகுதியில் உள்ள திரு மண மண்டபத்தில் நிகழ்ச் சிகள் ஏற்பாடு செய்து வழங்கி மகிழ்ந்தார் சட்ட மன்ற உறுப்பினர் இ. கரு ணாநிதி எம்எல்ஏ இவ் வாறு கழக நிர்வாகிகளுக்கு கடந்த 9 ஆண்டுகளாக வழங்கி வருகிறார்.

இவ்வாறு எங்கள் பகு திக்கே வந்து எங்களை தேடி எங்களுக்கு பட்டாசு ஸ்வீட் பாக்ஸ் ரொக்கமாக ஒரு தொகை என எங்களது விழா காலங்களில் வழங்கு வது மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாக நிர்வாகிகள் அனைவரும் தெரிவித்தார் கள். இந்நிகழ்ச்சிகளின் போது மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை வே.கருணாநிதி பகுதி கழ கச் செயலாளர் த.ஜெயக்கு மார் இ.எஸ்.பெர்னாட் ஒன்றியச் செயலாளர் ப. ரவி என்கிற விவேகா னந் தன் ஊராட்சி மன்ற தலை வர்கள் வனஜா தயாளன் உஷா மாரிமுத்து துணைத் தலைவர் ஜோசப், மீனம் கிருஷ்ணமூர்த்தி ஆகி யோர் உடன் இருந் தார்கள்.

தமிழன் தொலைக்காட்சி நிறுவனத்தின்

# ஒளிப்பதிவாளர் விக்னேஷ்வரன் மறைவு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல்!

சென்னை, அக். 31 -

தமிழன் தொலைக் காட்சி நிறுவனத்தின் ஒளிப்பதிவாளர் விக்னேஷ் வரன் மறைவிற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் இரங்கல் செய்தி விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங் கல் செய்தி வருமாறு:

தமிழன் தொலைக் காட்சி நிறுவனத்தில் திருச்சி மாவட்டத்தில் ஒளிப்பதிவாளராகப் (Cam eraman) பணியாற்றி வந்த டி.விக்னேஷ்வரன் அவர் கள், உடல்நலக் குறைவு காரணமாக நேற்று (30.10.2024) உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியி னைக் கேட்டு மிகுந்த வேத னையடைந்தேன்.

ஊடகத் துறையில் கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய விக் னேஷ்வரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தமி ழன் தொலைகாட்சி நிறுவ னத்திற்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலை யும் தெரிவித்துக் கொள்கி றேன்.

மேலும், முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, மறைந்த ஒளிப்பதிவா ளர் விக்னேஷ்வரன் குடும் பத்திற்கு பத்திரிகையாளர் நல வாரியத்தின் மூலம் உரிய நிவாரணத் தொகை வழங்கப்படும் என்பதை யும் தெரிவித்துக் கொள்கி றேன்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி 52 வது வார்டுக்குட்பட்ட பால்குளத்தில் ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்பு சுவர் உயர்த்துதல் மற்றும் புதிய பூங்கா அமைக்கும் பணியினை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்சி லதா, மண்டல தலைவர் இ.ஜவஹர், இளநிலை பொறியாளர் ராஜா, மாமன்ற உறுப்பினர் ரமேஷ், இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆ.லிவிங்ஸ்டன், சுகாதார அலுவலர் ராஜா, பகுதி செயலாளர்கள் த.ஜீவா, மு. சேக்மீரான், மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




பசும்பொன்தேவர் குருபூஜைக்குச் செல்லும் வழியில் தமிழக முதல்வர் அவர்களுக்கு மானாமதுரையில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம் .எல் .ஏ., முன்னிலையில் உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது .இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.